இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடன்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

---

*[1982, நவம்பர் மாதம் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, திசெம்பர் மாதம் 03 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 20 தபாற் செலவு: சதம் 50

# 1982 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடன்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

[1982, நவம்பர் மாதம் 3 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

வ.—ஓ. 45/82
1533

**எந்த ஏதேனும் காலப்பகுதியின்போது அந்தக் காலப்பகுதியிலான செலவினத்துக்கு அதிகாரமளிக்கும் ஒதுக்கீட்டுச் சட்டமெதுவும் நிறைவேற்றப்படாதிருக்கின்றதோ அந்தக் காலப்பகுதியின்போது அரசாங்கத்தின் சேவைக்கென இலங்கைக்கு உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அத்தகைய சேவையின் மீதான செலவினத்துக்கென அக்காலப்பகுதியின்போது தேவைப்படுவனவான பணங்களை அத்தகைய கடன்பணத்திலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பாடுசெய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

**1.** இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடன்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

*எந்த ஏதேனும் நிதியாண்டுக்கென ஒதுக்கீட்டுச் சட்டமெதுவும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லையோ அந்த நிதியாண்டின் முதலாம் நாளன்று தொடங்குவதும் ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறுவதுமான ஏதேனும் காலப் பகுதியின்போது அரசாங்கத்தின் சேவைக்கெனக் கடன்களைத் திரட்டுவதற்கான அதிகாரம்.*

**2.** அரசாங்கத்துக்கானதும் அதன் சார்பிலானதுமான கடன்களைத் திரட்டுவதனை அதிகாரமளிக்கும் வேறேதேனும் சட்டத்திற்குப் பங்கமின்றி, அரசாங்கத்தின் எந்த ஏதேனும் நிதியாண்டு தொடர்பில் ஒதுக்கீட்டுச் சட்டமெதுவும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லையோ அந்த நிதியாண்டின் முதலாம் நாளன்று தொடங்குவதும் அந்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறுவதுமான (இச்சட்டத்தில் "இயைபான காலப்பகுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்,) காலப்பகுதிக்கான, அரசாங்கத்தின் எந்த ஏதேனும் செலவினத்துக்கென ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதோ அல்லது வேறுவகையாகச் சட்டமுறையாக அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தச் செலவினமானது அரசாங்கத்துக்கென அல்லது அதன் சார்பில், இலங்கைக்கு உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே திரட்டப்படுவதற்கென இத்தால் அதிகாரமளிக்கப்படும் கடன்களின் பெறுதிகளிலிருந்து பொறுத்துக்கொள்ளப்படலாம். இது எவ்வாறுயினும், இயைபான காலப்பகுதியில் மூன்று மாதங்களைக்கொண்ட ஏதேனும் காலப்பகுதியின்போது திரட்டப்படும் கடன்களின் கூட்டுமொத்தப் பெறுமதிகளானவை, அந்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அரசாங்கத்தின் முற்போந்த நிதியாண்டுக்கெனத் திரட்டப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகையின் நான்கிலொரு பங்கினை விஞ்சுதலாகாது.

ஏ 66169—6,875 (10/82)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.